DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 349/2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பால்கரசு |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. வேலு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 12.03.2026

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கருங்கவயல் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலைசெய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்துபோன வேலு எனது தந்தை ஆவார். கடந்த 19.05.2024 தேதி மாலை சுமார் 4.00 மணியளவில் கருங்கவயலில் உள்ள எங்கள் வீட்டிலிருநது எனது அப்பாவேலு மளிகை சாமான்கள் வாங்குவதற்காக சைக்கிளில் திணையத்தூருக்கு செல்ல புறப்பட்டார். திணையத்துாரில் ரெத்தினம் மளிகை கடை இடது பக்கம் உள்ளது. எனது அப்பா வலது பக்கம் சைக்கிளை நிறுத்திவிட்டு சாமான்கள் வாங்குவதற்கு ரோட்டை கடந்து கடைக்கு

சென்று சாமான்கள் வாங்கிவிட்டு மீண்டும் ரோட்டை கடந்து சைக்கிளை எடுக்க சென்றபோது இருசக்கர வாகனம் ஒன்று வேகமாக வந்து எனது அப்பா மீது மோதிவிபத்து ஏற்பட்டதாக ரெத்தினம் மளிகை கடை உரிமையாளர் எனக்கு போன் செய்து தெரிவித்தார்.

2. உடனே நான் புறப்பட்டு மாலை 5.00 – 5.30 மணியளவில் சம்பவயிடமான ரெத்தினம் மளிகை கடை அருகே வந்தேன். சம்பவயிடத்தில் எனது அப்பாவை தூக்கி ஓரமாக சாய்த்து வைத்திருந்தார்கள் எனது அப்பாவிற்கு வலது கால் முறிந்து இருந்தது. வலது கை, நெற்றி , தலையில் காயம் ஏற்பட்டு இரத்தம வழிந்து கொண்டிருந்தது. உடனே அங்கிருந்த ஒரு வேன் மூலம் எனது அப்பாவை ஏற்றி திருவாடானை அரசுமருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். அதன்பின் அன்றையதினமே மாலை 6 மணியளவில் மேல் சிகிச்சைக்கு திருவாடானை அரசு மருத்துமவனையிலிருந்து சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் எனது அப்பாவை அழைத்துசென்றோம். சிவகங்கை அரசு மருத்துவமனையில் வைத்து இரவு 10 மணியளவில் எனது தந்தை சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்.

3.சம்பவத்தன்றே நான் ரெத்தினம் மளிகை கடைக்கு சென்றபோது அங்கிருந்தவர்கள் தேளுர் கிராமத்தை சேர்ந்த மனோகரன் தான் எனது அப்பா மீது மோதியதாக தெரிவித்தார்கள். மனோகரனை எனக்கு அடையாளம் தெரியாது. சம்பவத்திற்கு மறுநாளான 20.05.2024 தேதி காலை 7 மணியளவில் நான் தொண்டி காவல்நிலையம் சென்று விபத்தை குறித்து புகார் மனுஅளித்தேன். புகார் மனுவை ஆசிரியராக பணிபுரியும் அண்ணன் ஒருவர் எழுதினார். அதில் இடம்பெற்றுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்தகையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1.சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். இருபக்கமும் வாகனங்கள் செல்லக்கூடிய அகலமான சாலை என்றால் சரிதான். சம்பவயிடத்தின் அருகே வீடுகளும் கடைகளும் அதிகம் உள்ளது என்றால சரிதான். சம்பவயிடத்திற்குஅருகே அரசுபள்ளி உள்ளது என்றால் சிறிதுதள்ளி உள்ளது. சம்பவயிடத்திற்கு திணையத்தூர் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். சுற்றியுள்ள கிராமத்தார் மளிகை பொருட்கள் வாங்க திணையத்தூர் வருவார்கள் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் எப்போதும் கூட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். விபத்தை கேள்விபட்டு தான் சென்றேன் என்றும் விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன எனது அப்பாவிற்கு 70 வயது மேல் இருக்கும்.

2. எனது அப்பாவிற்கு வயது முதிர்வின் காரணமாக காது சரியாக கேட்காது என்றால் சரியல்ல. காது நன்றாக கேட்கும். சம்பவயிடத்தில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருப்பதாலும் சம்பவநேரத்தில் பள்ளிமுடிந்து சிறுவர்கள் வந்ததால் வாகனங்கள் வேகமகாக செல்லமுடியாது மெதுவாக தான் செல்லமுடியும் என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய நபர் வாகனத்தை வேகமாக தான்ஓட்டி வந்தார். பள்ளிக்கூடம் இருப்பதால் இரண்டு பக்கமும் பேரிகார்டுகள் இருந்தது என்றால் சரியல்ல. பேரிகார்டுகள் இல்லை. பேரிகார்டுகள் உள்ளது என்றும் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியலல. போலிசார் விசாரணையில் எனது அப்பா சாலையை கடக்கும் போது தான் விபத்து ஏற்பட்டதாக தெரிவித்தேன் என்றால் சரிதான்.

3.எதிரி வாகனத்தை சம்பவசமயத்தில் மெதுவாக தான் ஓட்டி வந்தார் என்றும் எனது அப்பாவிற்கு காது சரியாக கேட்காமல் கவனக்குறைவாக ரோட்டை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் இருந்த நபர்களை சம்பவத்தை குறித்து தெரியும் என்றால் சரிதான். அவர்களை விசாரித்தால் விபத்தை குறித்து தெரியும் என்றால் சரிதான். புகார் மனுவில் கண்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் நான் சொல்லிதான் புகார் எழுதினார்கள். நான் சொன்னவாறு சொன்ன தேதியில் விபத்து நடைபெறவில்லை என்றும் எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றும் எனது தந்தை இருபக்கமும் கவனிக்காமல் ரோட்டை கடந்ததால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. கவனமாக ரோட்டை கடந்திருந்தால் விபத்து நடந்திருக்காது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.